செ.வெ.எண்.20 நாள்:11.11.2020

**கரூர் மாவட்டம்**

**கரூர் மாவட்டத்தில் முருங்கை, வெற்றிலை மற்றும் வாழைக்கு பதப்படுத்தும் மையங்கள் அமைப்பது தொடர்பாக மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களுடன் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் ஆலோசனை மேற்கொண்டார்**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டத்தில் முருங்கை, வெற்றிலை மற்றும் வாழைக்கு பதப்படுத்தும் மையங்கள் அமைப்பது தொடர்பாக மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களுடன் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் திரு.சுன் சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் அரசு விருந்தினர் மாளிகையில் இன்று (11.11.2020) ஆலோசனை மேற்கொண்டார்.

கரூர் மாவட்டத்தில் அதிகம் விளையக்கூடிய முருங்கை, வெற்றிலை மற்றும் வாழை ஆகிய பயிர்களுக்கு பதப்படுத்தும் மையம் அமைத்துத்தர வேண்டும் என்பது இம்மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும்.

இதுதொடர்பாக. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தியதன் அடிப்படையில் அதற்கான பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், தமிழ்நாடு விநியோக தொடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் மூன்று முதன்மை பதப்படுத்தும் மையங்கள் அமைப்பதற்கான நிலங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், அரவக்குறிச்சி வட்டம் கொடையூர் கிராமத்தில் 1.48 ஏக்கர் பரப்பில் முருங்கைக்கும், கிருஷ்ணராயபுர வட்டம் மகாதானபுரம் வடக்கு கிராமத்தில் 2.6 ஏக்கர் பரப்பில வாழைக்கும், கரூர் வட்டம் புஞ்சைப்புகளூர் கிராமத்தில் 1 ஏக்கர் பரப்பில் வெற்றிலைக்கும் பதப்படுத்தும் மையங்கள் அமைக்கப்பட உள்ளன.

முருங்கை முதன்மை பதப்படுத்தும் மையத்தில் முருங்கைக்காய் உலர்த்தி பொடி செய்து மதிப்புக்கூட்டி விற்பனை செய்யப்பட உள்ளது. வாழை மற்றும் வெற்றிலை முதன்மை பதப்படுத்தும் மையங்களில் வாழைப்பழங்களையும், வெற்றிலைகளையும் சுத்தம் செய்து தரம் பிரித்து விற்பனைக்கு அனுப்பும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதுமட்டுமல்லாது, தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பிச்சம்பட்டி கிராமத்தில் உணவுப்பூங்கா அமைக்கவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கென்று சுமார் 10 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. உணவுப்பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் தங்கள் பொருட்களை பதப்படுத்துவதற்கும், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றுவதற்கு இந்த உணவுப்பூங்கா பெரிதும் பயனுள்ள வகையில் இருக்கும்.

இதுதொடர்பாக, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் திரு.சுன்சோங்கம்ஜடக்சிரு,இ.ஆ.ப., அவர்கள் இன்று ஆலோசனை மேற்கொள்பப்பட்டது. கரூர் மாவட்ட மக்களின் கனவை நினைவாக்கும் வகையில் விரைவில் கரூர் மாவட்டத்தில் முருங்கை, வாழை மற்றும் வெற்றிலைக்கான பதப்படுத்தும் மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மிகவிரைவில் இத்திட்டங்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**